ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பரப்பிரம்மனே நம :
ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகாய நம :







# ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாளுக்கு ராஜகோபுரத்துடன் திருப்பணி

நமோ வாசே நமோ வாசஸ் பதயே !
நமோ விஷ்ணவே ப்ருஹதே கரோமி ! — யஜீர்வேதம்

அஸாஹஸோ அநபாய ஸ்ரீ : ஸஸஹாய : ஸ்ரியைவ ஸந் !
ஸ்ரீ மாந்நாராயணோ வாஸீதேவோ அவ்யாத் விஷ்ணுருத்தம : !! — ஹயக்ரீவ சகஸ்ரநாமம்

ஜ்ஞாநாநந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் !
ஆதாரம் ஸர்வவித்யாநாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே !! — ஸ்ரீ வேதாநாந்த தேசிகர்

"ஓவாத் துயர்ப்பிறவி உட்பட மற்றேவ்வெவையும்
மூவாத் தனி முதலாய் மூவுலகும் காவலோன்
மாவாகி ஆமையாய் மீனாகி மானிடமாம்
தேவாதி தேவபெருமான் என் தீர்த்தனே" — நம்மாழ்வார் திருவாய்மொழி

முன்னிவ்வுலக கேழுமிருள் மண்டி யுண்ண
முனிவரோடு தானவர்கள் திகைப்ப வந்து
பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம்
பரிமுகமாயருளிய வெம் பரமன் காண்மின்.
செந்நெல்மலி கதிர்க்கவரி வீசும் சங்கம்
அவை முரலச் செங்கமல மலரை ஏறி
அன்னமலி பெடையோடு அமரும் செல்வத்
தணியமுந்தூர் நின்று கந்த அமரர் கோவே. — திருமங்கையாழ்வார்

திருவோணத்தான் உலகாளும் என்பார்களே. — பெரியாழ்வார்

"யத்தர்மைரிஹ தர்மிணீ விஹரதே நாலகிருதிர் நாயிகா" என்கிற ஸ்ரீஸ்வாமி தேசிகன் கூற்றுப்படி எம்பெருமானுடன் கூடவே தாமும் அவதரித்து பிராட்டி, தர்மஸம்ரக்ஷணம் செய்வதாக பிரமாணம். ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ அவதாரத்தில் அர்ச்சையாக எழுந்தருளப் பண்ணும் போது வாக்தேவியாக வாமபாகத்தில் பிராட்டி எழுந்தருளியிருந்து இருவருமாக ஏககாலத்தில் தமது கடாக்ஷ விசேஷத்தால் இகபர சுகபலன்களை வாரி வாரி வழங்குகின்றனர். "வாகிசாக்யா வாஸுதேவஸ்ய மூர்த்தி:" என ஸ்வாமி தேசிகன் கூறியபடி திருமாமணி மண்டபத்தில் நித்யஸூரிகளுக்குத் தலைவனாக, தமதனைத்தும் அவர் தமக்கு வழங்கி தாம் மிக விளங்கும் பரிமுகன், இக்கலிகாலத்தில் அர்ச்சையிலும் எளிமையின் எல்லை நிலமாக எழுந்தருளியிருந்து தம்மை தரிசிக்கும் பக்தர்களுக்கு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அவரவர் விரும்பும் பலன்களை வள்ளல் தன்மையுடன் வழங்குகிறார்.

புதுச்சேரி, ராமகிருஷ்ண நகரில், அகஸ்த்ய ஸேவிதமான புண்ணிய பூமியில், ஜூலை மாதம் 1971 (ஆனிஅனுஷம்) நம் பரிமுகனாகிய பரமன் எழுந்தருளி மகாஸம்ப்ரோஷணம் கண்டருளினார். ஆகம சாஸ்திரம் கூறும் விதமாக பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்கிற கிரமத்தில், 1983 ஆனிமாதமும் 1995 ஆனிமாதமும் இருமுறை சிற்சில திருப்பணிகள் செய்து மகாஸம்ப்ரோஷணம் நடைபெற்றன.

தற்போது ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாளுக்கு ராஜகோபுரத்துடன் திருப்பணி செய்து மகாஸம்ப்ரோஷணம் செய்ய எம்பெருமான் அனுக்ரஹத்துடன் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பூமிபூஜை 24–11–2010 புதன்கிழமை அன்று காலை 10.30 மணி அளவில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. வருகிற ஆனிமாதம் 2011ல் முன்வருவதாக மகாஸம்ப்ரோஷணம், எம்பெருமான் பிராட்டி கிருபையால், நடைபெற உள்ளது.

ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாளுக்கு தனியாக ஓர் ஆலயம் நம்முடைய புதுச்சேரி ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் ஆலயம் மட்டுமே, இங்கு மூலவர், உற்சவர், செல்வர், கௌதுபர், யாகபேரர், ஆகிய ஐந்து மூர்த்திகளும் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாளாகவே அமைந்துள்ளது சிறப்பம்சம்.

நம்முடைய ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் ஆலயத்தில் மட்டுமே ஆவணி திருவோண நந்நாளான ஸ்ரீ ஹயக்ரீவ ஜெயந்தியை முன்னிட்டு பிரம்மோற்சவம் மிகச்சிறப்பாக 40 வருடங்களாக நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது.

இதில் ஸ்ரீ ஹயக்ரீவ ஜெயந்தி அன்று பெருமாள் திருத்தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு சேவை சாதிக்கிறார். இந்த பிரம்மோற்சவத்தில் கருடவாகனத்தன்றும், சேஷ வாகனத்தன்றும் பெருமாள் தங்க கருடசேவையாகவும், தங்க சேஷவாகனத்திலும் எழுந்தருளி பக்தர்களுக்கு சேவை சாதிக்கிறார். நம்முடைய ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் சன்னதியில், பவித்ரோத்ஸவ, பிரம்மோற்சவ, தேசிகர் உற்சவ, அத்யயன உற்சவ, தனுர்மாத உற்சவ, ஆகிய உற்சவங்கள் மிகச்சிறப்பாக ஸம்பிரதாயப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு வியாழன் அன்றும் தொழில் வளர்ச்சிக்காகவும், திருமணமாகாத ஆண்கள் பெண்களுக்கு சீக்கிரமாக திருமணம் நடைபெறவும், குடும்பத்தில் மங்களமான வாழ்வு வளம்பெறவும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பெருமாளை தரிசித்து அருள் பெருகின்றனர்.

மேலும், ஒவ்வொரு வருடமும் +2 மற்றும் 10வது பொதுத்தேர்வு நாட்களில் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாளுக்கு மிகச்சிறப்பான பீஜாக்ஷரங்களை கொண்ட ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ சகஸ்ரநாமம் 108 நாட்களுக்கு லட்சார்ச்சனையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் புதுவை மட்டுமல்லாமல், தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, டெல்லி ஆகிய மாநிலங்களிலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர். இவ்வளவு சிறப்பம்சங்கள் உடைய ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள் (உற்சவர்) தங்க சிம்மாசனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

இவ்வளவு சிறப்பம்சங்கள் வாய்ந்த நம் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள் திருச்சன்னதி முன் பகுதியில் மூன்று நிலை ராஜகோபுரத்துடனும், மூலஸ்தானம் மற்றும் கொடிமரம் இவை முழுவதும் செப்புதகடு அடித்து அதன்மேல் தங்கமுலாம் பூசப்பட்டு சுமார் ரூபாய் சுமார் 1.5 கோடி செலவில் வெகுவிரைவில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதால் பக்தர்கள் தங்களால் இயன்ற நன்கொடையை அளித்து எம்பெருமானின் அனுக்ரஹத்தை பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


**நன்கொடை அளிக்கவேண்டிய முகவரி**

**SRI LAKSHMI SARAS MARUTHI TRUST**

No.9, Ramakrishna Nagar, Muthialpet, Puducherry - 605 003.

Phone No : 92455 64373. Visit : www.lakshmi-hayagriva.org


Sylvia Printers, Pondicherry-1. Ph : 4209793.

ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பரப்பிரம்மனே நம :
ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகாய நம :







# ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாளுக்கு ராஜகோபுரத்துடன் திருப்பணி

நமோ வாசே நமோ வாசஸ் பதயே !
நமோ விஷ்ணவே ப்ருஹதே கரோமி ! — யஜீர்வேதம்

அஸாஹஸோ அநபாய ஸ்ரீ : ஸஸஹாய : ஸ்ரியைவ ஸந் !
ஸ்ரீ மாந்நாராயணோ வாஸீதேவோஅவ்யாத் விஷ்ணுருத்தம : !! — ஹயக்ரீவ சகஸ்ரநாமம்

ஜ்ஞாநாநந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் !
ஆதாரம் ஸர்வவித்யாநாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே !! — ஸ்ரீ வேதாநாந்த தேசிகர்

“ஓவாத் துயர்ப்பிறவி உட்பட மற்றேவ்வெவையும்
மூவாத் தனி முதலாய் மூவுலகும் காவலோன்
மாவாகி ஆமையாய் மீனாகி மானிடமாம்
தேவாதி தேவபெருமான் என் தீர்த்தனே” — நம்மாழ்வார் திருவாய்மொழி

முன்னிவ்வுலக கேழுமிருள் மண்டி யுண்ண
முனிவரோடு தானவர்கள் திகைப்ப வந்து
பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம்
பரிமுகமாயருளிய வெம் பரமன் காண்மின்.
செந்நெல்மலி கதிர்க்கவரி வீசும் சங்கம்
அவை முரலச் செங்கமல மலரை ஏறி
அன்னமலி பெடையோடு அமரும் செல்வத்
தணியழுந்தூர் நின்று கந்த அமரர் கோவே. — திருமங்கையாழ்வார்

திருவோணத்தான் உலகாளும் என்பார்களே. — பெரியாழ்வார்

“யத்தர்மைரிஹ தர்மிணீ விஹரதே நா ணாகிருதிர் நாயிகா” என்கிற ஸ்ரீஸ்வாமி தேசிகன் கூற்றுப்படி எம்பெருமானுடன் கூடவே தாமும் அவதரித்து பிராட்டி, தர்மஸம்ப்ரஷணம் செய்வதாக பிரமாணம். ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ அவதாரத்தில் அர்ச்சையாக எழுந்தருளப் பண்ணும் போது வாக்தேவியாக வாமபாகத்தில் பிராட்டி எழுந்தருளியிருந்து இருவருமாக ஏககாலத்தில் தமது கடாஷ விசேஷத்தால் இகபர சுகபலன்களை வாரி வாரி வழங்குகின்றனர். “வாகிசாக்யா வாஸுதேவஸ்ய மூர்த்தி” என ஸ்வாமி தேசிகன் கூறியபடி திருமாமணி மண்டபத்தில் நித்யஸூரிகளுக்குத் தலைவனாக, தமதனைத்தும் அவர் தமக்கு வழங்கி தாம் மிக விளங்கும் பரிமுகன், இக்கலிகாலத்தில் அர்ச்சையிலும் எளிமையின் எல்லை நிலமாக எழுந்தருளியிருந்து தம்மை தரிசிக்கும் பக்தர்களுக்கு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அவரவர் விரும்பும் பலன்களை வள்ளல் தன்மையுடன் வழங்குகிறார்.

புதுச்சேரி, ராமகிருஷ்ண நகரில், அகஸ்த்ய ஸேவிதமான புண்ணிய பூமியில், ஜீலை மாதம் 1971 (ஆனிஅனுஷம்) நம் பரிமுகனாகிய பரமன் எழுந்தருளி மகாஸம்ப்ரோஷணம் கண்டருளினார். ஆகம சாஸ்திரம் கூறும் விதமாக பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்கிற கிரமத்தில், 1983 ஆனிமாதமும் 1995 ஆனிமாதமும் இருமுறை சிற்சில திருப்பணிகள் செய்து மகாஸம்ப்ரோஷணம் நடைபெற்றன.

தற்போது ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாளுக்கு ராஜகோபுரத்துடன் திருப்பணி செய்து மகாஸம்ப்ரோஷணம் செய்ய எம்பெருமான் அனுக்ரஹத்துடன் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பூமிபூஜை 24-11-2010 புதன்கிழமை அன்று காலை 10.30 மணி அளவில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. வருகிற ஆனிமாதம் 2011ல் முன்வருவதாக மகாஸம்ப்ரோஷணம், எம்பெருமான் பிராட்டி கிருபையால், நடைபெற உள்ளது.

ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாளுக்கு தனியாக ஓர் ஆலயம் நம்முடைய புதுச்சேரி ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் ஆலயம் மட்டுமே, இங்கு மூலவர், உற்சவர், செல்வர், கௌதுபர், யாகபேரர், ஆகிய ஐந்து மூர்த்திகளும் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாளாகவே அமைந்துள்ளது சிறப்பம்சம்.

நம்முடைய ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் ஆலயத்தில் மட்டுமே ஆவணி திருவோண நந்நாளான ஸ்ரீ ஹயக்ரீவ ஜெயந்தியை முன்னிட்டு பிரம்மோற்சவம் மிகச்சிறப்பாக 40 வருடங்களாக நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது.

இதில் ஸ்ரீ ஹயக்ரீவ ஜெயந்தி அன்று பெருமாள் திருத்தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு சேவை சாதிக்கிறார். இந்த பிரம்மோற்சவத்தில் கருடவாகனத்தன்றும், சேஷ வாகனத்தன்றும் பெருமாள் தங்க கருடசேவையாகவும், தங்க சேஷவாகனத்திலும் எழுந்தருளி பக்தர்களுக்கு சேவை சாதிக்கிறார். நம்முடைய ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் சன்னதியில், பவித்ரோத்ஸவ, பிரம்மோற்சவ, தேசிகர் உற்சவ, அத்யயன உற்சவ, தனுர்மாத உற்சவ, ஆகிய உற்சவங்கள் மிகச்சிறப்பாக ஸம்பிரதாயப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு வியாழன் அன்றும் தொழில் வளர்ச்சிக்காகவும், திருமணமாகாத ஆண்கள் பெண்களுக்கு சீக்கிரமாக திருமணம் நடைபெறவும், குடும்பத்தில் மங்களமான வாழ்வு வளம்பெறவும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பெருமாளை தரிசித்து அருள் பெருகின்றனர்.

மேலும், ஒவ்வொரு வருடமும் +2 மற்றும் 10வது பொதுத்தேர்வு நாட்களில் ஸ்ரீ லக்ஷமி ஹயக்ரீவ பெருமாளுக்கு மிகச்சிறப்பான பீஜாஷரங்களை கொண்ட ஸ்ரீ லக்ஷமி ஹயக்ரீவ சகஸ்ரநாமம் 108 நாட்களுக்கு லட்சார்ச்சனையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் புதுவை மட்டுமல்லாமல், தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, டெல்லி ஆகிய மாநிலங்களிலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர். இவ்வளவு சிறப்பம்சங்கள் உடைய ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள் (உற்சவர்) தங்க சிம்மாசனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

இவ்வளவு சிறப்பம்சங்கள் வாய்ந்த நம் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள் திருச்சன்னதி முன் பகுதியில் மூன்று நிலை ராஜகோபுரத்துடனும், மூலஸ்தானம் மற்றும் கொடிமரம் இவை முழுவதும் செப்புதகடு அடித்து அதன்மேல் தங்கமுலாம் பூசப்பட்டு சுமார் ரூபாய் சுமார் 1.5 கோடி செலவில் வெகுவிரைவில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதால் பக்தர்கள் தங்களால் இயன்ற நன்கொடையை அளித்து எம்பெருமானின் அனுக்ரஹத்தை பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**நன்கொடை அளிக்கவேண்டிய முகவரி**


**SRI LAKSHMI SARAS MARUTHI TRUST**

No.9, Ramakrishna Nagar, Muthialpet, Puducherry - 605 003.

Phone No : 92455 64373. Visit : www.lakshmi-hayagriva.org


... Printers, Pondicherry-1. Ph : 4209793